1975 மார்ச் 13]

திரு. வை. பாலசுந்தரம் : கிழக்குத் திசை நாடுகள் பற்றிக் கேட்டேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நாம் வெளி நாடுகளுக்கு, தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்வது முக்கியமாக இலங்கைக்குத் தான். இலங்கைக்கு மட்டும் நாம் ஏறத்தாழ 1,36,000 கிலோ ஏற்றுமதி செய்கிறேம். அடுத்தாற்போல் வருகிறது—கிலோ கணக்கில் தான் சொல்ல வேண்டியிருக்கிறது, மஞ்சளை நாம் கிலோ கணக்கில் தான் ஏற்றுமதி செய்கிறேம்—இங்கிலாந்து. அந்த நாட்டிற்கு 1,07,000 கிலோ என்கிற அளவுக்கு நாம் ஏற்றுமதி செய்கிறேம். ஆனல் மற்ற நாடுகளில் அரேபியன் நாடுகளில் (குறுக்கீடு) மஞ்சள் கயிறு? மஞ்சள் கயிறைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. Probably he means coconut fibre. I do not know.

சேலத்திலுள்ள நகராட்சிச் சாலைகள்.

*306—வினு.—திரு. கி. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

1972–73, 1973–74-ம் ஆண்டு சேலம் நகரத்தில் அரசுப் பராமரிப்புக் காகப் புதியதாக எடுத்துள்ள நகராட்சிப் பாதைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 1972–73-ம் ஆண்டு சேலம் நகரத்தில் அரசுப் பராமரிப்புக்காக எந்த ரோடுகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1973–74-ம் ஆண்டில் நெடுஞ்சாலைக் கிராமப்பணித் துறையினரின் பொறுப்பில் பஸ் ரூட் ரோடுகளை எடுத்துக்கொள்ளும் அரசு, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை ஆணை 132, நாள் 23—1—74-ன் படி சேலம் நகரத்தில் அரசுப் பராமரிப்புக்காக 1.6 கி. மீட்டர் நீளமுள்ள ஓமலூர் பிரதான சாலையை எடுத்துள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையினை தன் பராமரிப்பில் வைத்துக்கொள்ள சேலம் நகர மன்றம் தன்னுடைய 28—2—1974 தேதிய தீர்மான எண். 2400 ல் தீர்மானித்துள்ளது. அத்தீர்மானம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கி. ஜெயராமன் : தலைவரவர்களே, அரசு இந்த நகர மன்ற பாதைகளையெல்லாம் எந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் எடுத்துக் கொள்ள முன் வருகிறது? நான் அறிந்த வரையில், எந்த அடிப்படையில் நாம் எடுத்துக் கொள்ளுகிறேமோ அதே அடிப்படையில் எல்லா நகராட்சி களிலும் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. இப்படி வேறுபடுவதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : எந்தெந்த நகராட்சி விரும்புகிறதோ அதைப் பரிசீலித்து மொத்தமாக இந்தந்த மாவட்டத் திற்கு எவ்வளவு எடுத்துக் கொள்ளலாம் என்று நாம் எடுத்துக் கொள் கிறேம். 25 சத விகிதம் 'கான்ட்ரிபியூஷன் பார் மெய்ன்டனன்ஸ்' அவர்கள் ஒப்புக்கொண்டால் எடுத்துக் கொள்கிறார்கள்.